பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
25 11 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமான வகையில் அமையும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- கூட்டுறவு இயக்கத்திற்கு உலகின் முன்னோடியாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.
- நாட்டின் 75-வது அரசியல் சாசனம் தினத்தையொட்டி ‘எமது அரசியல் சாசனம் எனது பெருமை’ பாதயாத்திரை இன்று புதுதில்லியில் தொடங்கியது.
- தெற்கு வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- இந்தியா-வுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா தடுமாற்றத்துடன் ஆடி வருகிறது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

மக்களவையில் மறைந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின் நண்பகல் 12 மணி வரை அவை ஒத்தி வைக்கப்பட்டது.

பின்னர் அவை கூடியபோது காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மணிப்பூர் பிரச்சினை, அதானி குழும விவகாரம் உள்ளிட்டவை குறித்து கேள்வி எழுப்பினர்.

இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக அவை நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் மாநிலங்களவையும் இன்று நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமான விவாதங்களுடன் பயனுள்ள வகையில் அமையும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், இந்திய அரசியல் சாசனம் ஏற்றுக் கொள்ளப்பட்ட 75-வது ஆண்டு நிறைவு விழா உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் நடப்பு கூட்டத்தொடரில் இடம்பெற உள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஜனநாயகத்தின் முக்கிய மைல் கல்லாக அரசியல் சாசனம் திகழ்வதாக அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சில அரசியல் கட்சிகள் செயல்படுவதாகக் கூறிய பிரதமர், மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அவர்கள் தடையாக இருப்பதாகத் தெரிவித்தார்.

உலக அளவில் பெருமைமிக்க அமைப்பாகத் திகழும் இந்திய நாடாளுமன்றத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளதாக அவர் கூறினார்.

உலக அரங்கில் நாட்டின் பெருமையை நிலைநாட்டுவதற்கான பங்களிப்பை நாம் ஒவ்வொருவரும் செலுத்த வேண்டுமென்று பிரதமர் கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்றத்தில் தங்களது குரலை ஒலிக்கச் செய்வதற்காக வாக்களித்துள்ள நாட்டு மக்களுக்கு உறுப்பினர்கள் தங்களது ஜனநாயகக் கடமையை அர்ப்பணிப்பு உணர்வோடு நிறைவேற்றித் தர வேண்டுமென்று திரு நரேந்திரமோடி வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

நாட்டின் 75-வது அரசியல் சாசனம் ஏற்பு தினத்ததையொட்டி இன்று புதுதில்லியில் நடைபெற்ற ‘எமது அரசியல் சாசனம் எனது பெருமை’ பாதயாத்திரையில் மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கலந்து கொண்டார்.

அரசியல் சாசன தினம் கொண்டாடப்படுவதையொட்டி நடைபெற்ற இந்த பாத யாத்திரையில் மை-பாரத், நேரு யுவகேந்திரா, நாட்டு நலப்பணி, தேசிய மாணவர்படை, சாரண சாரணியர் இயக்கங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஜனநாயகப் பாதையில் முக்கிய மைல் கல்லாக விளங்கும் அரசியல் சாசன சிற்பிகளின் தொலைநோக்கு பார்வை குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் இந்த பாத யாத்திரை நடைபெறுகிறது.

[]<<<>>>[]

கூட்டுறவு இயக்கத்திற்கு உலகின் முன்னோடியாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று பிரதமர் திரு நரேந்திரமோடி தொடங்கி வைக்க உள்ள சர்வதேச கூட்டுறவு மாநாடு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினரின் பொருளாதார நிலையை உயர்த்தி அவர்களை ஒருங்கிணைத்து தேசிய நீரோட்டத்தில் கொண்டு வருவதற்கான அரும்பணியை கூட்டுறவு அமைப்பு செய்து வருவதாக தெரிவித்தார்.

கூட்டுறவு அமைப்புகளை சுயசார்பு பெற்றவையாக உருவாக்கும் முயற்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடி ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நாட்டு மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கான பல திட்டங்கள் கூட்டுறவு அமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதுதில்லியில் இன்று தொடங்கவிருக்கும் சர்வதேச கூட்டுறவு மாநாட்டில் இந்தியாவின் கூட்டுறவுத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பலப் பணிகள் உலக நாடுகளுக்கு எடுத்துரைக்கப்படும் என்று தெரிவித்தார்.

அனைவரையும் பொருளாதார கட்டமைப்பில் இணைப்பது, வறுமை ஒழிப்பு, பாலின சமத்துவம், உள்ளிட்ட ஐ நா-வின் இலக்குகளை இந்தியாவின் கூட்டுறவு அமைப்புகள் அடைந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களையும், வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தினால் மட்டுமே வளர்ச்சி இலக்குகளை எட்டு முடியும் என்றும் திரு அமித்ஷா உறுதிபட தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் பருவமழையை எதிர்கொள்ள மாநில அரசு தயாராக உள்ளது என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட எழில்நகர் பகுதியில் பள்ளி மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்கிய பின் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர், நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் இரு அவைகளிலும் தமிழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மாநிலத்தின் கோரிக்கைகள் குறித்து வலியுறுத்துவார்கள் என்று கூறினார்.

[]<<<>>>[]

தெற்கு வங்கக்டலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாகப்பட்டினத்திலிருந்து தெற்கு தென்கிழக்கே 880 கிலோமீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளது.

இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து இந்தியா - இலங்கை கடற்பகுதியையொட்டி அடுத்த இரண்டு நாட்களில் நகரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்றழுத்த தாழ்வுமண்டலம் காரணமாக தமிழகத்தில் இன்று இரவு முதல் டெல்டா மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில் அடுத்த நான்கு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்றழுத்த தாழ்வுமண்டலம் காரணமாக தமிழகம் மற்றும் புதுவையில் உள்ள ஒன்பது துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

இதனிடையே வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுமண்டலம் உருவாகியுள்ளதை அடுத்து காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் என்பதால் ராமேஸ்வரம் மண்டபம் பகுதி மீனவர்கள் மறு உத்தரவு வரும்

வரை கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என மீனவர் நலத்துறை கேட்டுக் கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - கார்த்திகேயன்) -30---- செகண்ட்*

**[]<<<>>>[]**

லெபனானில் இஸ்ரேலிய படைகள் தங்களது தாக்குதலை மேலும் தீவிரப்படுத்தி வருகிறது.

மத்திய பெயிரூத்தில் பாஸ்தா மாவட்டத்தில் நடத்தப்பட்ட இஸ்ரேலிய விமானப்படை தாக்குதலில் 29 பேர் கொல்லப்பட்டனர்.

அவர்கள் தங்கியிருந்த குடியிருப்புப் பகுதிகள் தரைமட்டமானது.

இது தொடர்பாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், பெயிரூத்தில் உள்ள 12 ஹெஸ்புல்லா படை முகாம்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெஸ்புல்லாவின் புலனாய்வு கட்டமைப்புகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளையும் இஸ்ரேல் ராணுவம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானிலிருந்து சிரியா வழியாக லெபனானுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதாகவும், இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது.

பெயிரூத்துக்கு வெளியே **Shmistar** -ரில் நடத்தப்பட்ட தாக்குதலில் 13 கொல்லப்பட்டதாகவும், 13 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அருகில் இருந்த நகரங்களை சேர்ந்த மேலும் 13 பேர் கொல்லப்பட்டதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதனிடையே லெபனான் சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் நேற்று இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 20-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்தாக கூறியுள்ளது.

இஸ்ரேலிய தாக்குதலில் அதிக அளவில் அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவதாகவும் லெபனான் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான இன்று 534 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் ஆஸ்திரேலியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் சற்று முன் வரை 8 விக்கெட் இழப்புக்கு 227 ரன் எடுத்துள்ளது.

**Perth**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 487 ரன் எடுத்திருந்த நிலையில், ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

இந்தியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 150

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 104 ரன்

[]<<<>>>[]

முஸ்டாக் அலி கோப்பைக்கான டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி இன்று சிக்கிம் அணியை எதிர்கொள்கிறது.

இந்தூரில் இப்போட்டி பிற்பகல் மணி 1-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

ஆசிய கோப்பை கூடைப்பந்து தகுதிச்சுற்றுப் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் இன்று இந்தியா – கஜகஸ்தானை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி மாலை ஆறு மணிக்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஹைதராபாத் அணி – ஒடிசா அணியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாதில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் புனே – ஜெய்ப்பூர் அணியையும், பெங்களூரு – மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**